**நாள் -** 09.08.2021 சிசி. 126/14 அ.சா.1 தங்கம்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி ,,,,,

நான் தற்போது ஆலங்குளம் தாலுகா நல்லூரில் வசித்து வருகிறேன். தற்போது எனது கணவர் கீழப்புதுாரில் சொந்த வீட்டில் குடியிருந்து வருகிறார். எனது கணவர் அடிக்கடி குடித்துவிட்டு வந்து என்னை அடித்தார். எனது கணவர் 25 பவுன் தங்க நகையும், ஒரு லட்சம் ரூபாய் ரொக்கமும் கேட்டு என்னை அடித்தார். என் பெற்றோர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததால் அவர் கேட்ட நகை பணம் எதுவும் எங்களால் கொடுக்கமுடியவில்லை. தற்போது எதிரி 2வது மனைவியான சபீனா என்ற ஆமீனா என்பவருடன் குடும்பம் நடத்தி வருகிறார். நான் எனது 2வது பையன் பிரபாகரன் என்பவர் என் வயிற்றில் கருவுற்றிருந்த போது 1வது எதிரி என்னை அடித்து விரட்டி விட்டார். நான் ஜீவனாம்சம் கேட்டு வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. தற்போது எனது கணவரும் செலவுக்கு பணம் எதுவும் தரவில்லை. நான் 2வது குழந்தை பிறப்பதற்காக எனது தாய் வீட்டிற்கு சென்றிருந்தேன். குழந்தை பிறந்து 40 நாட்கள் கழித்து 1வது எதிரி என்னை பார்க்க வந்தார். பின்னர் என்னை அழைத்துச் செல்வதாக கூறிச்சென்றவர், பின்பு என்னையும் எனது குழந்தையையும் அழைத்துச் செல்ல வில்லை. நாளது தேதி வரை நான் எனதுஅம்மா வீட்டில் தான் குடியிருந்து வருகிறேன். என்னுடைய குழந்தைகளை நான் தான் படிக்க வைத்து வருகிறேன். எனது கணவர் எனது குழந்தைகளுக்கு படிப்பு செலவுக்கு பணம் எதுவும் தரவில்லை. அதன் பின்பு தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்று எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு மனு கொடுத்தேன். மற்ற எதிரிகள் 1வது எதிரிக்கும் எனக்கு சண்டை வரும் போது என்னைப் பார்த்து நீ வீட்டில் இருக்காதே வெளியில் சென்று விடு என்று என்னை மிரட்டுவார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள தங்கம் என்று போடப்பட்டுள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் மனு அ.சா.ஆ.1ஆகும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில் - எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லையென எடுத்துரைத்ததன் பேரில் சாட்சியம் குறுக்கு விசாரணையின்றி முடித்து வைக்கப்பட்டது.